www.ecourtsindia.com

<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>
<u>OS.No. 1210 / 2022</u>

**வா.சா.2. ராமராஜ்** **09.01.2024**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

தாவா சொத்தை நான் நேரில் பார்த்துள்ளேன். தாவா சொத்தின் கிழக்கில் பொம்முராசும் மேற்கே ரம்யா வீட்டுகாரர் செல்வராஜ் என்பவரும் இருந்து வருகிறார்கள் என்றால் தவறு. அனைவரும் கூட்டாக தான் இருந்து வருகிறார்கள். தாவா வீடு ஒரே பொது வீடு. தாவா வீடு அந்த நிலத்தின் கிழக்கு பகுதியில் உள்ளதா அல்லது மேற்கு பகுதியில் உள்ளதா என்றால் நடுப்பகுதியில் உள்ளது. தாவா வீடு மேற்கு ஓரத்தில் உள்ளது என்றும் அதை வாதிகளே குறுக்கு விசாரணையில் ஒத்துக் கொண்டுள்ளனர் என்றும் அதனால் தாவா சொத்து பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியவில்லை என்று சொன்னால் தவறு. செல்வராசும் பொம்முராசும் தாவா சொத்துக்களை வாய்மொழியாக பிரித்து கொண்டார்கள் என்றால தவறு. பிரித்துக் கொள்ளவில்லை. ஊரில் பஞ்சாயத்து நடைபெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தவறு. பஞ்சாயத்து நடைபெறவில்லை. பட்டாவும் மற்றும் புல வரைபடத்தில் சொத்துக்கள் பிரிக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1-ம் பிரதிவாதி பெயரில் தனிப்பட்டா இருந்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கூட்டாக இருந்தது தான் எனக்கு தெரியும். தாவா சொத்துக்களை ஏற்கனவே பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றும் அதனால் தான் வருவாய் ஆவணங்களில் பிரதிவாதி பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றும் இந்த விபரங்கள் அனைத்தும் நடைபெற்ற நிலையில் தாவா சொத்துக்கள் குறித்து எனக்கு எந்த விபரம் தெரியாது என்றும் வாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1-ம் வாதி எந்த பணமும் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால் தவறு.

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2024.01.09 17:04:06 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNDG190041502022/truecopy/order-5.pdf